The Hon. Sri C. SUBRAMANIAM : இந்த இடம் முதலில் மிலிட்டேரிக்குச் சேர்ந்தது. அவர்கள் இங்கிருந்து செல்ல ஒப்புக்கொள்ள வேண்டும். அதன் பிறகு காரியாலயங்களைக் கொண்டு வருவது பற்றி யோசிக்க வேண்டும். முதல் காரியமே நடைபெறாத போது மற்றவைகளைப்பற்றிப் பேசி என்ன பிரயோஜனம்.

Sri A. V. P. ASAITHAMBI : கனம் தியாகராஜன் அவர்கள் கேள்வி, சட்ட சபை அங்கத்தினர்களுக்கு இடவசதியில்லை என்பதுதான். சென்னை மவுண்ட் ரோட் சர்க்கார் மாளிகையில், விடுதிகள் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ராஜாராம் நாயுடு அவர்களுக்கும், காலம் சென்ற வரதராஜுலு நாயுடு அவர்கள் குடும்பத்தினருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அதனால், எங்களுக்கு இடம் இல்லாமல் போகிறதே என்ற காரணத்திற்காக அவைகளை எங்களுக்கும் கொடுக்க சர்க்கார் முயற்சிக்குமா?

The Hon. Sri C. SUBRAMANIAM : சட்ட சபை அங்கத்தினர்களுக்கு எத்தனை வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அவற்றில் ஒரு வீடு கூட எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஸ்ரீ ராஜாராம் நாயுடு அவர்கள் ஸ்டேட் (பஞ்சாயத்து) யூனியன் பிரஸிடெண்ட் ஆக இருப்பதால், அவர்கள் யூனியன் காரியாலயத்தில் இருக்கிறார்கள்.

Sri A. A. RASHEED : Will the Government address the Union Government for shifting the military to some rural areas ?

Mr. SPEAKER : How does that question arise here ? (Laughter.)

Sri M. KALYANASUNDARAM : இராணுவ இலாக்காவை வேறு இடத்திற்குப் போகச் சொல்லாவிட்டாலும், சர்க்கார் காரியாலயங்கள் பூராவையும், மவுண்ட்ரோட் பகுதிக்கு மாற்ற முயற்சி செய்வார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM : எந்தப் புதிய இடத்திற்கு மாற்றுவதானாலும் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்க வேண்டியிருக்கும். அதற்கு செலவாகும் கோடிக்கணக்கான ரூபாயை மற்ற திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் செலவழிக்கலாம் என்று ஈடுபடுகிறோம்.

Annamalai University

*212 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Annamalai University buildings were handed over to the Sub-Collector, Chidambaram, on 30th March 1957; and

(*b*) if so, the reasons therefor?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri N. K. PALANISAMI : மாணவர்கள் குறைகளை சமாதான முறையிலேயே தீர்க்க வேண்டும் என்று, வைஸ் சான்ஸலரோடு பேசிக்கொண்டிருக்கும்போதே, கலெக்டரிடம் இவை கொடுக்கப்பட்டனவா?

Mr. SPEAKER : No. The answer given was 'No'.

Sri M. KALYANASUNDARAM : கட்டடத்தை விட்டு வெளியே போகவேண்டும் என்று மாணவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா? அவர்கள் திரும்பவும் சேர்த்துக்கொள்ளப்பட்டு விட்டார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM : யூனிவர்ஸிடியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் மீது இருந்த கேஸ்கள் வாபஸ் ஆகிவிட்டது.

17th September 1958]

SRI A. GOVINDASAMY : அண்ணாமலை பல்கலைக் கழக கட்டிடத்தை சப்-கலெக்டரிடம் விடாவிட்டாலும், மாவட்டக் கலெக்டரிடம் விடப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முதலிலே, கேள்வியில் கொடுக்கப்பட்டிருக்கும் தேதியே தப்பு. 30—3—57 என்று இருக்கிறது. (சிரிப்பு.) 30—3—58 என்றே வைத்துக் கொண்டாலும், சப்-கலெக்டரானாலும், டிஸ்டிரிக்ட் கலெக்டர் என்றிருந்தாலும், அதே பதில்தான்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : கலவரத்தில் ஈடுபட்ட மாணவர்கள் 72 பேர்கள் மீது கேசுகள் போடப்பட்டன. அவர்கள் அம்மாதிரி ஈடுபட்டார்கள் என்ற விஷயத்தை ஸ்காலர்ஷிப் போர்டுக்கு தெரிவிக்கப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தக் கேள்வி சம்பந்தப்பட்ட மட்டில், அந்த 72 பேர்கள் மீது இருந்த கேஸ்கள் அவர்கள் வருத்தம் தெரிவித்த பிறகு, அவர்கள் மட்டும் அல்ல, அவர்கள் பெற்றோர்களும் வருத்தம் தெரிவித்து எழுதி கொடுத்த பிறகு—கேசுகளை வாபஸ் வாங்கி, அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

SRI A. V. P. ASAITHAMBI : கடந்த 30-ம் தேதி, மார்ச்சு, நடைபெற்ற இந்த சம்பவம் பற்றி அறிக்கை வெளியிடும் போது, அமைச்சர் அவர்கள், அந்தக் கலவரத்திற்கு பரிகாரம் கண்டுபிடிக்கும்படி கேட்டிருந்தால், செய்திருப்பார்கள் என்று கூறினார்கள். 30-ம் தேதி இரவு, கல்வி அமைச்சர் பரிகாரம் தேட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டார்களே, அவர்கள் என்ன முயற்சி எடுத்தார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : டி. எம். கேவினருக்கு எந்த அரசியல் நோக்கம் இருந்தாலும், என்னைப் பொறுத்த வரையில், அந்த சம்பவம் சுமுகமாக முடிவாகிவிட்டது. டி. எம். கே. அதைக் கிளப்பிவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : கேள்விக்கு சம்பந்தமல்லாமல் உபகேள்வி கேட்டால் என்ன செய்வது? தனிக் கேள்வி கேட்கலாம். கட்டிடத்தைப் பற்றிய கேள்விகள் மேல், 30–ம் தேதி நிகழ்ச்சியைப் பற்றி கேள்வி கேட்டால் எப்படி?

Basic Education Training Schools

*218 *Q*.—**SRI P. G. MANICKAM** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நம் மாகாணத்திலிருக்கும் உபாத்தியாயர்களுக்காக நடத்தப்படும் மூன்று மாதகால அடிப்படை கல்விப் பயிற்சி சாலைகள் 1957–58–ல் எத்தனை ஆரம்பிக்கப்பட்டது.?

(ஆ) என்னென்ன துறையில் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது?

(இ) 1957–58–ல் இப்பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 29

(*b*) A copy [a] of the scheme of work for three months' course of retraining in Basic Education is placed on the table of the House.

(*c*) Rs. 2,16,000.

SRI P. G. MANICKAM : அவ்வாறு ஆதாரக் கல்வி பயிற்சி உபாத்தியார்கள் இருக்கும் இடங்களிலெல்லாம், மாணவர்களுக்கு, தக்ளியும், ராட்டையும் சப்ளை செய்வதற்கு திட்டம் சர்க்காரிடம் இருக்கிறதா ?

[a] Printed as Appendix I on pages 84–87 infra.